பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
நா.காசிப்பிள்ளை
சந்தை பின்புறம்
சங்கானை
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 27 செவ்வாய்க்கிழமை (12-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 358

### ★ சமாதான பேச்சுக்களின் மத்தியிலும்
# யாழ். குடாநாடு மீதான யுத்தத்தில்
# அரசு தீவிர கவனம் செலுத்துகிறது!

## விநியோக பாதை திறப்பதே நோக்கம்!

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதியில் விடுதலைப் புலிகளிடம் இழந்த பகுதிகளை மீட்டெடுக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருப்பதனால் இழந்த பகுதிகளைக் கைப்பற்றுவதற்கான யுத்தத்தை முன்னெடுப்பதற்கு இராணுவத்தினர் தயாராகி வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தத்திற்கான ஆயத்தங்களிலும் ஒத்திகைகளிலும், படையினர் ஈடுபட்டுவருவதாகவும் அந்தச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நிபந்தனையற்ற பேச்சிற்கு தயாராக இருப்பதாக தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி இருந்தும் அரசு அதனை செவிமடுக்காது போர் நடவடிக்கைகளில் முனைப்புடன் செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை மீட்பதற்கு கினிகிர - 5 படைநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போதும், அரசினது போர் இலக்கு அடையப்படாமல் இப்பகுதியில் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

சமாதானப் பேச்சிற்கு ஏற்றவகையில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில்மோதல் தவிர்ப்பொன்

(8ஆம் பக்கம் பார்க்க)

### ஆசிரியர்களின்
## டிசம்;மாத சம்பளத்துடன் இடர்கால கொடுப்பனவும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களுக்கு வழங்கப்படாதிருந்த சம்பள நிலுவை மற்றும் இடர்காலக்கொடுப்பனவு ஆகியவற்றை உடனடியாக மார்கழிமாதச்சம்பளத்துடன் சேர்த்து வழங்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் சுசில்பிறேம்ஜயந்த உத்தரவிட்டுள்ளார்.

இக்கொடுப்பனவை வழங்குவதற்கு வடகிழக்கும மாகாண கல்வித்திணைக்கள கணக்காளருக்கு திறைசேரி 15 கோடியே 90லட்சம் ரூபாவை அனுப்பி வைத்துள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பரமேஸ்வரன் இக்கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிஹல உறுமயவின் பிரதிதலைவர் ராஜினாமா

(கொழும்பு)

சிஹலஉறுமய கட்சியின் பிரதித்தலைவர் பேராசிரியர் இந்திரட்ண கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார். இதுதொடர்பாக கட்சியின் செயலாளர் திலக் கருணாரட்ணவுக்கு அனுப்பி வைத்துள்ள நீண்டகடிதத்தில் கட்சியில் இடம் பெறும் ஊழல்கள் நிதிமோசடிகள் காரணமாகவே தாம் கட்சியிலிருந்து விலகுவதாக அவர் குறிப்பிட்டார்

இதேவேளை சிஹலஉறுமயவுக்கு வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகை நிதி வருவதாகவும் அதில் பெரும் ஊழல் இடம் பெறுவதாகவும் தெரியவருகிறது, [ந]

## ரெலோ உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் நேற்று முன்தினமிரவு முன்னாள் ரெலோ உறுப்பினரொருவர் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானார்.

பலியான நபர் சிவநாயகம் இலங்கேஸ்வரன் (வயது29) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது சின்னத்துரை ஸ்ரீ பத்மநாதன் என்பவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பலியான நபர் ரெலோவிலிருந்து விலகிஇராணுவப் புலனாய்வுத் துறையுடன் சில காலம் இணைந்து செயல் பட்டுள்ளார்எனமட்

(8ஆம்பக்கம் பார்க்க

## உயிர்தப்பிய ஆசிரியர் அடையாளம் காட்டினார்

(கொழும்பு)

பண்டாரவளைபடுகொலைச் சம்பவத்தின் போது காயமடைந்து உயிர் தப்பிய ஆசிரியரான கைதியொருவர் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் மூவரை அடையாளங் காட்டியுள்ளார்

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணமே
# ஐ.தே. கட்சியிடம் குடிகொண்டுள்ளது

### அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்பட வேண்டுமென்ற எண்ணம் ஐக்கிய தேசிய கட்சிக்கு அறவே கிடையாது. மாறாக எந்தவழியிலாயினும் ஆட்சியை கைப்பற்ற வேண்டுமென்ற திட்டத்தினுடனேயே இயங்கி வருகிறது.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் போது முஸ்லிம்களின் பிரச்சினைகளும் கவனத்திற்கு எடுக்கப்படுமென புலிகள் உறுதியளித்துள்ளதாக நோர்வே அரசாங்கம் முஸ்லிம் காங்கிரஸிடம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகள் இலங்கை

→8ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக பதிவை ஜன 31க்குள் மேற்கொள்க

(யாழ்ப்பாணம்)

கடந்த 1999ம் ஆண்டு க.பொ.த(உயர்தரம்) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் பல்கலைக்கழககற்கை நெறியில் பயில்வதற்காக பதிவுசெய்தபரீட்சார்த்திகள் தாம் விரும்பும் பட்சத்தில் தமது பழைய பதிவைஇரத்து செய்து விட்டு புதிய கற்கநெறிக்கு விண்ணப்பிக்க முடியும் இதற்கானகால எல்லை அடுத்த மாதம் 31ம் திகதிவரைநீடிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பல்கலைக் கழகமானிய ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2000ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளிவந்த இந்நிலையில் பரீட்சார்த்திகளின் நன்மைகருதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### க.பொ.த(சா.த)
## பரீட்சை பணியாளருக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த (சா.த)பரீட்சைளில் கடமையாற்றும் பணியாளர்களுக்கானகொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ் அதிகரிப்பின்படி இணைப்பு நிலைய அலுவலர்களுற்கு ரூ.300இல்இருந்து ரூ350ஆக அதிகயப்பும்

★உதவி நிர்வாகத்தினருக்கும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கும் 230ரூபாவிலிருந்து 275ரூபாவாக அதிகரிப்பு

● நிரந்தர நோக்குநர்களுக்கு 195ரூபாவிலிருந்து 225ரூபாவாகஅதிகரிப்பு.

● சிற்றூழியர்சளுக்கு 130 ரூபாவிலிருந்து 200ரூபாவாக அதிகரிப்பு;

இவ்வதிகரிப்பு காரணமாக அரசாங்கத்திற்கு மூன்று கோடிரூபா மேலதிகமாக செலவாகியுள்ளது.

# தமிழகத்தில் புலிகளின்பயிற்சிமுகாம்
# பாராளுமன்றில் 'சோ' தெரிவிப்பு

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மிகவும் இரகசியமான ஒதுக்குப்புறஇடங்களில் பயிற்சிமுகாம்கள் இருப்பதாக சோ.இராமசாமி இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

கன்னட திரைப்பட நடிகர் ராஜ்குமாரை சந்தன மரக்கடத்தல் வீரப்பன் விடுதலைப்புலிகளின் உதவியுடன் கடத்தினான் என்றும். விடுதலைப்புலிகளுக்கும், திரிபுர கிளர்ச்சிக்காரர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சோ மேலும் தெரிவிக்கையில். விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுக்குத் தமிழகத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும். இந்த விடயத்தில் தமிழக அரசும் மத்திய அரசும் அக்கறை காட்டுவதாகத்தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.(வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எத்தனை இடையூறுகள் ஏற்பட்டாலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்

## நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எத்தகைய இடைறுகள் ஏற்பட்டாலும் எமது பிரதேச அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்இப்பணிக்கு சகலரின்ஒத்துழைப்பும் அவசியமாகும்.

திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் நேற்று இடம் பெற்ற வீடுகள் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நல்லூர் பிரதேசசபை தலைவர் க.மணிபல்லவராஜன் (நிசாந்தன்)மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,எமது பகுதியில் கடமை புரியும் தொழிலாளர்களின் நன்மை கருதி வீடுகள் கையளிக்கப்படுகின்றன.கால ஓட்டத்தில் உத்தியோகத்தர்களுக்கும் வீடுகள் கையளிக்கப்படும்.

மேற்படி நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபைத்தலைவர் ந.திரிலோகநாதன், வலி.கிழக்கு பிரதேசசபை தலைவர் யூ.குணசிங்கம், மானிப்பாய் பிரதேசசபை தலைவர் அன்ரன் ஜோண்சன்,நல்லூர் பிரதேசசபை செயலாளர் செல்வரத்தினம் உட்பட பெருமளவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (க-03)

# இழப்பீட்டு தொகை வழங்கல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 386 பேருக்கு அசையும் அசையாசொத்துக்களுக்கான இழப்பீட்டு முதற்கட்டத் தொகை வழங்கப்படவுள்ளது.

அனலைதீவைச் சேர்ந்த 27 பேரும், எழுவைதீவைச் சேர்ந்த 10 பேரும்,காரைநகரைச் சேர்ந்த 201 பேரும், ஊர்காவற்றுறையின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த 148 பேரும் இவர்களில் அடங்குவர். (உ-75)

# இன்று

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழக வளர்ச்சி நிதிக்கான கண்காட்சி உதைபந்தாட்டம்,இன்று பி.ப 3.30 மணியளவில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில்நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி உதைபந்தாட்டத்தில்,நெல்லியடி டயமன்ஸ் அணியை எதிர்த்து யா/ பல்கலைக் கழக உடற்கல்வி அணியும் ஸ்கந்தவரோதய அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டு அணியும்மோதுகின்றன. (உ)

# யாழ்.பத்திரிகையாளருக்கு விரைவில் கணனிப்பயிற்சி

(வடமராட்சி கிழக்கு)

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும்பத்திரிகையாளருக்கு கணனிப் பயிற்சி வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்பகரமான தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது விடயம் தொடர்பாக வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் சாதகமான வகையில் மேற்படி நிறுவனங்கள் பதிலளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில்அண்மையில்இடம்பெற்றவடஇலங்கை பத்திரிகையாளர் சங்க கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கணனிப் பயிற்சி இன்றி பத்திரிகையாளர் பலரும் கடமை புரிந்து வருவதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (க-43)

# சடலம் வைத்தியசாலையில் பிஸ்டல், கிரனேட் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் 12.45 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிசூட்டுச்சம்பவத்தில் காயமடைந்த இராணுவசிப்பாய் ஒருவர் பலாலி இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டதாக கூறப்படும் இளைஞன் ஒருவரின் சடலம் சுன்னாகம் பொலிஸாரினால் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சடலத்துக் குரியவரிடம் இருந்து மீட்டதாக கூறப்படும், வானொலி தொலைதொடர்பு சாதனம், பிஸ்டல், கிரனேட்,சைனைட் ஆகியன சுன்னாகம்,பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்விளைஞனிடம் இருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படும் அடையாள அட்டையில் இராசலிங்கம் பவன் (வயது 28 சுருவில் ஊர்காவற்றுறை) என்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இணுவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புலி உறுப்பினர் தங்கியுள்ளார் என்ற தகவல் இராணுவத்திற்கு கிடைத்ததையடுத்தே இச்சம்பவம் நிகழ்ந்ததாக கூறப்படுகின்றது. (க-12)

# இராசி பலன்

12/12/2000
(கார்த்திகை 27, செவ்வாய்)
பிரதமை பி.ப 1.49 வரை
மிருகசீரிடம்
மு.ப 10.32
வரை
ராகுகாலம் 3.20 – 4.50
சுபநேரம் 10.50 – 12.20
சித்தம், விநாயக
விரதாரம்பம்.

**மேடம்**
நினைத்தகாரியம்கைகூடும், இனிய சம்பவம், பிரயாணம், தனவரவு.

**இடபம்**
வாக்குகலகம், காரியதாமதம், கௌரவக்குறை, பணச்செலவு.

**மிதுனம்**
தெய்வானுகூலம், உடல் நலம், சயனசுகம், முயற்சி பலிதம்.

**கடகம்**
பிரயாணம், பணவிரயம், கர்வப்படுதல், காரிய தாமதம்.

**சிங்கம்**
தனலாபம், குடும்பசுகம், நண்பர்கள் சந்திப்பு, சந்தோசம்.

**கன்னி**
தொழில் லாபம், அதிகார நிலை, முயற்சி பலிதம், தடுமாற்றம்.

**துலாம்**
பிரயாணம், கட்டுப்பாடு, வயிற்றுக்கோளாறு, அச்சமான நிலை.

**விருச்சிகம்**
தலையிடி, எதிர்பாராத பிரச்சினை, சிறு வியாதி, பிரயாண பயம்.

**தனுசு**
போசன சுகம், களஸ்திர சுகம், பிரயாணம், தனவரவு

**மகரம்**
தொழில் விருத்தி, காரியம் கைகூடும், சந்தோசம், நோய் குணமடைதல்.

**கும்பம்**
சிறு வியாதி, குடும்பக் கவலை, காரியத் தடங்கல், பிரயாணம் தாமதம்.

**மீனம்**
உறவினர் வெறுப்பு, பயந்த சுபாவம், சுகக்குறைவு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# செய்தித் துளிகள்

## சமுர்த்தி அலுவலகம் நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தற்சமயம் சமுர்த்தி வலய அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் நாளை புதன்கிழமைமாலை 5.00 மணிக்கு,யாழ். பிறவுண்வீதியில் அமைந்துள்ள வலயம்- 3 அலுவலகம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சமுர்த்தி வலயமுகாமையாளர்இ.புஸ்பலாதேவி, தலைமை முகாமையாளர் ரி. சந்திரகாசன் உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-3)

## புதிய வருடத்தில் வாசிகசாலைகள் அமைப்பு

(வவுனியா)

அடுத்த ஆண்டு வவுனியா மாவட்டத்திலுள்ள 12 பாடசாலைகளுக்கான வாசிகசாலைகள புதிதாக அமைக்கப்படவுள்ளது.

இதற்கெனக்கல்வி அமைச்சினால் 17 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. (உ)

## மின்கம்பி அறுந்து வீழ்ந்து ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு காலி பிரதான வீதிப் பகுதியில், அதிசக்தி வாய்ந்த மின்கம்பி ஒன்று அறுந்து வீழ்ந்ததால் ஒருவர் உயிரிழந்ததுடன் நால்வர் காயம் அடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30மணியளவில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்தவர் நாகொட, பெந்தல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக கொல்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப்பகுதியில் நேற்று முன்தினம் பெய்த கடும்மழையினாலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (உ-5)

## உபகரணங்கள் வழங்கல்

(ஊர்காவற்றுறை)

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் ஊர்காவற்றுறைப் பகுதி முன்பள்ளிகளுக்கான கற்பித்தல் உபகரணம் வழங்கல் நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மு.ப.10.30மணியளவில் இந்நிகழ்வு இடம் பெறும். (உ-75)

## அரச அதிபர் எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியாவில் காணிகளை விலை கொடுத்து வாங்குவோர் மிகவும் கவனமாக செயற்படுமாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் எச்சரித்துள்ளார்.

முடிக்குரிய காணிகளையும் தற்காலிக அனுமதியுடைய காணிகளையும் பலர் பணம் கொடுத்து வாங்கியுள்ளனர்.

இதனால் எதிர்காலத்தில் பல அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டி வரும் எனவும்,

இதனைத் தவிர்க்கும் வகையில், காணிகளை கொள்வனவு செய்வதன் முன் காணியின் தன்மையினை அறிந்துகொள்வது அவசியம் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## அலுவலகம் திறப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் சமுர்த்தி வலய அலுவலகம் நேற்று யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியிலுள்ள பழைய ஈழநாடு பத்திரிகைக் காரியாலயத்திற்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.உதவி அரச அதிபர் செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றஇவ் வைபவ ரீதியான திறப்பு விழா நிகழ்வில் சமுர்த்திமுகாமையாளர்களான யோகேந்திரநாதன், கியூமன் ஆகியோரும்சமுர்த்தி உத்தியோகத்தர்களான கமிலஸ், கருணாகரன் ஆகியோரும் கிராமசேவையாளர்களான மகாலிங்கம், சுந்தரராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-59)


*TENDER NOTICE*
*UNIVERSITY OF JAFFNA.*

Sealed Tenders are invited for the supply of the following items from the reputed suppliers:

| | Item | Quantity |
|---|---|---|
| 1. | Computers | 69 Nos. |
| 2. | Printers | 47 Nos. |
| 3. | Monitors | 28 Nos. |
| 4. | Data Switch | 21 Nos. |
| 5. | Note book PC | 02 Nos. |
| 6. | Stabilizer | 45 Nos. |
| 7. | UPS | 72 Nos. |
| 8. | Computer Scanner | 06 Nos. |

Tender documents including the specification of the items could be obtained from the following addresses:

1. Bursar's Office, Thirunelvely, Jaffna. T.P.No.021-2644
2. University Office in Colombo EG4 Central Road, Colombo 12. T.P.No.435620

Documents could be obtained during office hours from 15th to 22nd December, 2000 by making a non refundable Tender Fee of Rs. 500/- by money order drawn in favour of the University of Jaffna payable at the Jaffna Post Office. The University reserves the right to increase/reduce the quantity to be purchased and any special discount allowed to the University should be indicated.

The Tenders should be sent under the registe red cover or by hand to one of the above addres ses on or before 2.00 P.M. on 29th December, 2000 with the mark 'Tender for Computers' on the top left hand corner of the envelope.

(C/1104)

Registrar,
University of Jaffna.


## பிரிவுத்துயர் பகிர்வு

**திருமதி சுப்பு சின்னப்பிள்ளை**
**(சங்கானை)**

சங்கானை மேற்கு நிச்சாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பு சின்னப்பிள்ளை [11-12-2000] நேற்று காலமானார். ஈமக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்:- சு. நாகராசா
[மகன் — சாரதி]

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

### தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த

# மக்களை கவனிக்க யாருமே இல்லை

# ஆடம்பரத்திலேயே பலரும் நாட்டம்

## ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு உரை

(தென்மராட்சி)

தென்மராட்சி இடம்பெயர்வின் போது யுத்த முனையில் சிக்குண்டிருந்த மக்களைக் காப்பாற்றுவதற்கு இங்கு இருக்கின்ற எந்தவொருவெளிநாட்டு அமைப்புகளும் முன்வரவில்லை. அத்துடன் இடம் பெயர்ந்த மக்கள் பல்வேறு விதமான துன்பங்களையும்-துயரங்களையும் அனுபவித்து வந்திருந்த போதிலும் கூட அவற்றின் தாக்கத்தினைக் குறைக்கும் பணியிலும் இவை ஈடுபடவில்லை. இதுமனவருத்தத்துக்குரியதாகும். இந்நிலையில் மனிதநேய உதவிகள் மனிதாபிமானச் செயற்பாடுகள் என்று கூறிக் கொள்வதில் என்ன அர்த்தம் உள்ளது. கொடிகளைக் கட்டிக் கொண்டு அங்கும் இங்கும் வாகனங்களில் ஓடித் திரிவதில் பலரும் நாட்டம கொண்டுள்ளார்களேயொழிய மக்களின் துயரங்களையும்துன்பங்களையும் துடைப்பதில் எள்ளளவும் அக்கறை காட்டவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் கூறிக் கொள்ளவேண்டியிருக்கின்றது.

இவ்வாறு, யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் யாழ். பல்கலைக்கழகத்தின் கடற்றொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவன மண்டபத்தில் நடத்தப்பட்ட உள்ளூர் இடப்பெயர்வின்போதுவெளிநாட்டு அமைப்புகள் வழிகாட்டல் கொள்கைகளைக்கடைப்பிடித்தனவா? இல்லையா? எனும் தலைப்பிலான பட்டறையில் ஓய்வு பெற்ற யாழ். மாவட்ட நீதிவான். மு. திருநாவுக்கரசு ஆரம்பவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் பி. கந்தையா தலைமையில் நடைபெற்ற இப்பட்டறையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், சமூகசேவையாளர்கள், மதகுருமார் மற்றும் பத்திரிகையாளர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

ஓய்வு பெற்ற நீதிவான் திருநாவுக்கரசு அங்குதொடர்ந்து உரையாற்றும் போது,

நாம் ஒரு பயங்கரமான சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகிறோம். அடி மட்டத்தில் வாழ்கின்ற குடும்பங்கள் அனுபவித்து வருகின்ற பிரச்சினைகள் எண்ணில் அடங்காதவை. யாழ். குடா நாட்டில் ஏறக்குறைய நான்கு இலட்சம். மக்கள் வாழ்கின்றனர். இந்த நான்கு இலட்சம் பேருக்கும் ஒரு கண் சத்திரசிகிச்சை நிபுணர் ஒரு காதுமூக்குத்தொண்டை சிகிச்சை நிபுணர், குழந்தைகளுக்கான வைத்திய நிபுணர் ஒருவர் இப்படியே ஏனையவைகளும்.

ஒவ்வொருதுறைக்கும்ஆகக் குறைந்தது 40 வைத்திய நிபுணர்கள் இருக்க வேண்டும். வைத்திய சேவை மிகவும் தாழ்ந்த நிலைக்குப் போய் விட்டது. இங்கு இப்படியிருக்கின்ற போதிலும் வன்னியில் இந்த நிலை இதை விடப்பல மடங்கு மோசம் என்றேதான் கூறவேண்டும்.

உண்மையாக யாழ்ப்பாணம் இன்று இருக்கின்ற நிலையை நாம் சர்வதேசமட்டத்துக்கு எடுத்துக்கூறவேண்டும். தென்மராட்சியிலும் பளையிலும் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள குடும்பங்கள் பல்வேறு விதமான கஷ்டங்களையும், துன்பங்களையும் முகம் நோக்கி வருகின்றனர். அத்தகைய மக்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்நிலையில் கருத்தரங்குகள், மாநாடுகள், கூட்டங்கள் போன்றவற்றினால் இங்கு பெரிதாக எதுவுமே இடம் பெறப்போவதில்லை. இருப்பினும், மக்களின்அவலங்களை உரிய முறையில் வெளிப்படுத்தியே ஆகவேண்டும். ஏழைமக்களின் நிவாரணத்துக்குஎனக் கிடைக்கின்றபொருட்கள் பற்றிய உண்மையான கணக்குகளையும், தகவல்களையுமே சரியாகப் பெற முடியாமல்இருப்பது துர்லபம் எனக்குறிப்பிட்டார்.

இணையத்தின் முன்னாள் தலைவரும் ஊற்று நிறுவனத்தின் இயக்குநருமான பொ. விகிநேஸ்வரன் பட்டறையின் நோக்கம் பற்றி உரை நிகழ்த்துகையில்,

இன்று யாழ்ப்பாணத்தில் மொத்தமாக ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்த நிலையில்வாழ்ந்து வருகின்றனர். இது யாழ். குடா நாட்டில் தற்போது வாழ்கின்றமுழுசனத்தொகையில் 50 சத வீதமாகும் இத்தகைய மக்களுக்கு இங்கு பணியாற்றி வருகின்ற ஐக்கிய நாடுகள் அமைப்புகளோ அல்லது சர்வதேச அமைப்புகளோ ஐக்கிய நாடுகள்சபையின் வழிகாட்டல்கொள்கைக்கேற்ப தமது மனிதநேய உதவிகளை வழங்கவில்லை.

மக்கள் தொடர்ந்தும் கஷ்டங்களையும் அவலங்களையும் அனுபவித்து வருகின்ற வேளையில், மக்களுடைய யதார்த்தமான நிலைப்பாடுகளை உரியவர்களுக்கு உரியவாறு எடுத்துக் கூறவேண்டிய காலம் வந்து விட்டது.

இனியும் நாம் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது? பிச்சைக்காரர்கள் போல அவர்கள் பெறுவதை பிச்சைபோல் எடுக்கும் நிலையில் பொது மக்கள் இருக்கக் கூடாது இங்கிருக்கின்றவெளி அமைப்புகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம் மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டுமென்ற நிலைப்பாடும், விருப்பமும் கொண்டவர்கள் ஒரு வகைப்பட்டோர். தாமும், தமது உத்தியோகத்தர்களும் வாழ வேண்டும்என்றநினைப்பில் இருப்போர் இரண்டாம் வகைப்பட்டோர். இங்குநடைபெறுவனவற்றினை உளரீதியில் பார்ப்போர் மற்றொரு வகைப்பட்டோர்.

இடம்பெயர்ந்த மக்கள்எவ்விதம் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம்என்ற விழிப்புணர்வையும், தெளிவு நிலையையும் நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் செ சிவஞான சுந்தரம்(நந்தி) மற்றும் இந்து சமயப் பேரவையின்உப தலைவர்ஆ மகாலிங்கம் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(க-77)

---

### TENDER NOTICE
### UNIVERSITY OF JAFFNA.

Sealed Tenders are invited for the supply of the following items from the reputed suppliers:

| | Item | Quantity |
|---|---|---|
| 1. | Over Head Projector | 19 Nos. |
| 2. | Slide Projector | 06 Nos. |
| 3. | Pin Board | 02 Nos. |
| 4. | Flip Chart Board | 02 Nos. |
| 5. | Magi Board | 35 Nos. |
| 6. | Revolving Chairs | 65 Nos. |
| 7. | Computer Table | 15 Nos. |
| 8. | Multi Media Projector | 01 No. |
| 9. | Camera | 03 Nos. |
| 10. | Vacuum Floor Polisher | 02 Nos. |
| 11. | Stencil Scanner | 02 Nos. |
| 12. | Paper Cutter | 04 Nos. |
| 13. | Video Camera | 01 Nos. |
| 14. | Video Projector | 01 Nos. |
| 15. | CD Player | 01 No. |
| 16. | Tripods for camera | 01 No. |
| 17. | Epidiascope | 04 Nos. |

Tender documents including the specification of the items could be obtained from the following addresses:

1. Bursar's Office, Thirunelvely, Jaffna. T.P.No.021-2644
2. University Office in Colombo EG4 Central Road, Colombo 12. T.P.No.435620

Documents could be obtained during office hours from 15th to 22nd December, 2000 by making a non refundable Tender Fee of Rs. 500/- by money order drawn in favour of the University of Jaffna payable at the Jaffna Post Office. The University reserves the right to increase/reduce the quantity to be purchased and any special discount allowed to the University should be indicated.

The Tenders should be sent under the registered cover or by hand to one of the above addresses on or before 2.00 P.M. on 29th December, 2000 with the mark 'Tender for Office and Teaching Equipment' on the top left hand corner of the envelope.

Registrar,
University of Jaffna.

(C/1102)

---

### அடுத்த மாதம் 10ஆம் திகதியிலிருந்து

# சகல கூட்டுறவு ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதிப்பர்?

## சுற்று நிருபங்கள் அனுப்பியும் பலனில்லை

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர்களின் சம்பளம் ஏற்கனவே அறிவித்தபடி அதிகரிக்காவிட்டால் அடுத்த மாதம் 10-ஆம் திகதியிலிருந்து சகல கூட்டுறவுப் பணியாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

இதுவிடயம் தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது, வட-கிழக்கு கூட்டுறவுச் சேவை ஆணைக்குழு மேற்படிபணியாளரின்சம்பளத்தை மீளாய்வு செய்து 31/99 சுற்று நிருபத்தின் மூலம் கூட்டுறவுப் பணியாளரின் சம்பள அதிகரிப்புக் குறித்த சுற்றுநிருபத்தைக் கடந்த வருடம் மார்கழி மாதம் 12ஆம் திகதி சகல சங்கங்களுக்கும் அனுப்பியிருந்தது.

எனினும் கூட்டுறவுச் சங்க நிர்வாகங்கள் இதுவிடயத்தில் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வந்தன. ஒரு வருடமாகியும் கூட உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதுவிடயம் தொடர்பாக கூட்டுறவு ஊழியர் சங்க நிர்வாகம் கடந்த 10-ஆம் திகதி கூடி சில தீர்மானங்களை மேற்கொண்டது.

சகல துறையினருக்கும் சம்பள அதிகரிப்பு பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழு 31/99 சுற்று நிருபத்தை சகல கூட்டுறவுப் பணியாளரின் நலனிற்காகவும் அனுப்பியிருந்தது.

மேற்படி சுற்று நிருபத்திற்கு அமைய நிலுவையுடன் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து சம்பளத்தை வழங்க கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது

இக்கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதனை தவிர வேறு வழி கிடையாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கும், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவுக்கும் மற்றும் சகல கூட்டுறவு சங்க நிர்வாகங்களுக்கும் அறிவிக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (க)

## சாவகச்சேரி வணிகர் கவனத்திற்கு

(மந்திகை)

அண்மைய யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி வணிகர்களின் சேத விபரங்கள் பதியப்பட்டு வருகிறது

இந்த வகையில், இவ் வருடம் ஆனி மாதம் 20 ஆம் திகதியின் பின் சேதமடைந்த வணிக நிலையங்கள தொடர்பான விபரங்ளை உடன் பதியுமாறு, சம்பந்தப்பட்டவர்களிடம் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற செயலாளர் வ இராசதுரை அறிவித்துள்ளார்.

(உ-23)

## மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிக்கத் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிப்பதற்கு, நேற்று முதல் விசேட அதிரடிப் படையினர், தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 6ந் திகதி மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் பகுதியில், இராணுவ வாகன அணிமீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர்த் தாக்குதலையடுத்தே, இத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தாக்குதலானது குறிப்பிட்ட வாவியில் படகு ஒன்றிலிருந்தே விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருக்கலாமென புலனாய்வுத் துறை தகவல் வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

[க-05]

## சக்தி வாய்ந்த குண்டு மீட்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் இரண்டரைக் கிலோ நிறையுடைய சக்திவாய்ந்த குண்டு ஒன்றுடன் ஒரு நபரை அம்பாறைப் பொலிஸார் நேற்றிரவு கைது செய்துள்ளனர்.

சென்றல்கேம் பகுதியைச் சேர்ந்த இந்த சந்தேக நபரின் வீட்டின் பின்புறம் புதைக்கப்பட்டிருந்த குண்டே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி சரத்லூகொட தெரிவித்துள்ளார்.

ரீ என் ரீ என்ற சக்தி வாய்ந்த வெடி பொருள் மூலம் இந்தக் குண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதனுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் இன்னுமொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இவரிடம் நான்கு குண்டுகள் கொடுக்கப்பட்டு 50 இலட்சம் ரூபாவை விடுதலைப்புலிகள் வழங்கியதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதெ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(உ-5)

# கஜமுகனை வதம் செய்த விநாயகனின் அருள் வேண்டி நிதமும் நோற்போம்

இன்று செவ்வாய்க் கிழமை விநாயகர் விரதம் ஆரம்பமாவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

சி. ஜெயகணேசன்

பிள்ளையார் என்று செல்லமாக அழைக்கப்படும் விநாயகப் பெருமான் சிவபெருமானின் மூத்தகுமாரராக தோற்றம் பெற்றவர். அசுரர்கள் தவம்செய்து வரம் கேட்கும் போது தாம் அழியாது இருக்கும் பொருட்டு பல்வேறு வரங்களை இறைவரிடம் வேண்டிப் பெறுவர். அவற்றை அன்புக்கு கட்டுப்பட்டு கொடுத்தபின்னர் அந்த அசுரர்களை அழிக்க வேண்டிய பாரிய பொறுப்பும் இறைவரை வந்து சேருகிறது. கஜமுகாசுரன் என்பவன் தவம் செய்து மனித பூத தேவ வடிவங்களாலும், அவர்களின் ஆயுதங்களாலும் அழியாத வரத்தைப் பெற்றான். இவ்வாறான வினோத வரபலத்தால் அவன் தேவர்களை வெற்றிகொண்டு கொடுமைகள் பல புரிந்தான். தேவர்கள் சிவபெருமானை வேண்டி வணங்கி துதித்தார்கள்.

## பிள்ளையாரின் தோற்றம்

அசுரனை அழிக்கும் பொருட்டு சிவபெருமான் ஆனைமுகமும் ஐந்துகரமும் பேழைவயிறும் கொண்ட பிள்ளையாரைத் தோற்றுவித்தார்.

'பிடியதனுரு உமைகொள மிகு, கரியது வடிகொடு தனதடி வழிபடு மவரிடர், கடிகணபதிவர அருளினன் மிகுகொடை, வடிவினர் பயில் வலி வலமுறை-இறையே' என்று பிள்ளையாரின் திரு அவதாரத்தைத் தேவாரம் தெரிவிக்கின்றது.

கஜமுகாசுரனை அழிப்பதற்கு வடிவத்தால் யானை முகமும் பெரிய வயிறும் பாசங்குசங்களும் கொண்ட பெருமானுக்கு கஜமுகனை அழிப்பதற்கு ஆயுதம் ஒன்றைப் பாவிக்க முடியாதநிலை இருந்தது. இறைவன் கொடுத்தவரம் பொய்க்காது இருக்க தனது திருமுகத்தில் சந்திரப் பிறைபோல அழகாக விளங்கிய இரு கொம்புகளில் ஒன்றை ஒடித்து அதனால் கஜமுகாசுரனின் வலிமையை அடக்கினார். அதன்பின் பெருச்சாளி வடிவம்கொண்ட அவனை தனது வாகனமாக ஆக்கிக்கொண்டார். தேவர்கள் மகிழ்ந்து விநாயகப் பெருமானைப் பலவாறாகப் பூசித்தார்கள்.

## விநாயகர் ஷஷ்டி

மோதகம், அப்பம், கரும்பு, இளநீர், மாம்பழம் ஆகியவற்றை அன்புடன் ஏற்று அடியவர்களுக்கு இஷ்டசித்திகளை அள்ளிழளங்கும் விநாயகப் பெருமானுக்கு கார்த்திகை மாத தேய்பிறை பிரதமையிலிருந்து இருபத்தியொரு நாட்கள் விசேட விரத நாட்களாகும். மார்கழி மாதத்தில் வரும் வளர்பிறை ஷஷ்டிதினம் விநாயக ஷஷ்டிவிரதம்எனப்படும்.

விநாயகரைப் பற்றிய புராணக்கதைகள் ஏராளம் உள்ளன. அன்பால் வழிபட்ட ஔவைக்கும், அகத்தியமுனிவர்க்கும் விநாயகர் அருள் புரிந்தார். பிரணவ ரூபமாகவும் ஞானமுதல்வனாகவும் தனக்கு நிகரான ஒருதலைவன் இல்லாதவராகவும் விநாயகர் விளங்குகிறார்.

## தேவர்களுக்கும் அருளினார்

மனிதர்களுக்கு மட்டுமன்றி முருகன், திருமால் முதலிய தெய்வங்களுக்கும் அவர் அருள்புரிந்துள்ளார். வள்ளியை மணம் முடிக்க விநாயகன் அருளை வேண்டிய முருகன். அண்ணனின் அருளினால் அவளை மணம் முடித்தார். வீரபத்திரரிடம் சக்கரப்படையினைப் பறிகொடுத்த திருமால் விநாயகப் பெருமானை வணங்கி அதனைத்திரும்பப் பெற்றுக் கொண்டார். தமதுபுத்தியாலும் சக்தியாலும் எல்லாம் ஆகும் என்று கருதுவோர் இறுதியில் தெய்வசங்கல்பத்துக்கு அடிபணிந்து அடங்கி நிற்பதையே கஜமுகாசுரன் முதலிய அசுரர்களின் முடிவு காட்டுகிறது. சிவனும் விநாயகரும் வேறானவர்கள் அல்ல: ஒருவடிவில் நின்று கொடுத்த வரத்தை ஈஸ்வரன் மறுவடிவில் வந்து அழிக்கிறார். எனவே இறைவனைப் பக்தி செய்யும் போது நம்பாவங்கள் நீங்கி நாம் நற்கதிஅடைய வேண்டும் என்பதையே வரமாக வேண்டுவோமாக. பிள்ளையார் கதையினைகோயில்களில் படித்துவிரதம் இருப்பது தொன்றுதொட்டுவழங்கி வரும் மரபு இதனைப்பெருங்கதை விரதம் என்றும் சிறப்பித்துக்கூறுவர்.

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

டிசம்பர் மாதம் 09ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன:

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 145521 ஏ | 157161 ஏ |
| 170908 ஏ | 170908 பி |
| 171544 ஏ | 173880 ஏ |
| 142999 ஏ | 150094 ஏ |
| 150094 பி | 150094 சி |
| 150094 டி | 156590 ஏ |
| 161150 ஏ | 161150 பி |
| 161150 சி | 161150 டி |
| 161150 ஈ | 163495 ஏ |
| 165975 ஏ | 166014 ஏ |
| 166014 பி | 166014 சி |
| 166354 ஏ | 168578 ஏ |
| 168578 பி | 168630 ஏ |
| 168819 ஏ | 168819 பி |
| 168862 ஏ | 168862 பி |
| 168874 ஏ | 168889 ஏ |
| 168892 ஏ | 168892 பி |
| 171650 ஏ | 171671 ஏ |
| 171671 பி | 171711 ஏ |
| 171711 பி | 171717 ஏ |
| 171743 ஏ | 171749 ஏ |
| 171761 ஏ | 171811 ஏ |
| 171811 பி | 171859 ஏ |
| 171859 பி | 171859 சி |
| 171909 பி | 171921 ஏ |
| 171921 பி | 171921 சி |
| 171944 ஏ | 171993 ஏ |
| 172093 ஏ | 172102 ஏ |
| 172137 ஏ | 172792 ஏ |
| 173495 ஏ | 173495 பி |
| 173495 சி | 173801 ஏ |
| 173819 ஏ | 173819 பி |
| 173819 சி | 173819 டி |
| 173819 ஈ | 173820 ஏ |
| 173820 பி | 173881 ஏ |
| 173882 ஏ | 173883 ஏ |
| 173884 ஏ | 173885 ஏ |
| 173886 ஏ | 173890 ஏ |
| 173891 ஏ | 173892 ஏ |
| 173893 ஏ | 173894 ஏ |
| 173895 ஏ | 173896 ஏ |
| 173897 ஏ | 173897 பி |
| 173913 ஏ | 173913 பி |
| 173913 சி | 173913 டி |
| 165975 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 139443 ஏ | 139443 பி |
| 139443 சி | 139443 டி |
| 167642 ஏ | 167642 பி |
| 167642 சி | 167642 டி |
| 167659 ஏ | 167659 பி |
| 167699 ஏ | 167699 பி |
| 168373 ஏ | 168393 ஏ |
| 168393 பி | 168393 சி |
| 168429 ஏ | 168429 பி |
| 170925 ஏ | 173278 ஏ |
| 173314 ஏ | 173931 ஏ |
| 173931 பி | |
| 173938 ஏ | 174126 ஏ |
| 173938 ஏ | 173938 பி |
| 174126 பி | |
| 174047 ஏ | 174205 ஏ |
| 174205 பி | 174205 சி |

| | |
|---|---|
| 168264 ஏ | 168264 பி |
| 168264 சி | 173214 ஏ |
| 173214 பி | 173228 ஏ |
| 173228 பி | 173273 ஏ |
| 173273 பி | 173273 சி |

### நல்லூர்

| | |
|---|---|
| 145006 ஏ | 156898 ஏ |
| 156898 பி | 156898 சி |
| 156984 ஏ | 162841 ஏ |
| 162841 பி | 162862 ஏ |
| 162862 பி | 162862 சி |
| 162862 டி | 163730 ஏ |
| 163730 பி | 167646 ஏ |
| 167646 பி | 167646 சி |
| 170641 ஏ | 170659 ஏ |
| 170660 ஏ | 170662 ஏ |
| 170665 ஏ | 170903 ஏ |
| 170904 ஏ | 170909 ஏ |
| 170918 ஏ | 171547 ஏ |
| 171564 ஏ | 171565 ஏ |
| 171565 பி | 171609 ஏ |
| 174126 ஏ | 174126 பி |
| 174126 சி | 174128 ஏ |
| 174130 ஏ | 174130 பி |
| 174130 சி | 174130 டி |
| 174138 ஏ | 174138 பி |
| 174138 சி | 174149 ஏ |
| 174149 பி | 174151 ஏ |
| 174183 ஏ | 174183 பி |
| 174183 சி | 156207 ஏ |
| 156207 பி | 163422 சி |
| 163522 ஏ | 163522 பி |
| 163601 ஏ | 163601 பி |
| 163618 ஏ | 166103 ஏ |
| 166104 ஏ | 166222 ஏ |
| 166222 பி | 166222 சி |
| 166253 ஏ | 166253 பி |
| 166354 பி | 166404 ஏ |
| 168451 ஏ | 168451 பி |
| 168527 ஏ | 168527 பி |
| 168527 சி | 168527 டி |
| 168527 ஈ | 168527 எவ் |
| 168527 ஜி | 168693 ஏ |
| 168693 பி | 168869 ஏ |
| 168893 ஏ | 168893 பி |
| 168899 ஏ | 168907 ஏ |
| 168912 ஏ | 168912 பி |
| 168919 ஏ | 168923 ஏ |
| 168927 ஏ | 168927 பி |
| 168927 சி | 168927 டி |
| 168927 ஈ | |
| 168927 எவ் | 171653 ஏ |
| 171676 ஏ | 171708 ஏ |
| 171708 பி | 171708 சி |
| 171738 ஏ | 171750 ஏ |
| 171806 ஏ | 171806 பி |
| 171806 சி | 171806 டி |
| 171806 ஈ | 171806 எவ் |
| 171884 ஏ | 171925 ஏ |
| 171955 ஏ | 171963 ஏ |
| 17 975 ஏ | 171977 ஏ |
| 171996 ஏ | 172135 ஏ |
| 172135 பி | 173477 ஏ |
| 173492 ஏ | |

### சண்டிலிப்பாய்

170935 ஏ

### உடுவில்

| | |
|---|---|
| 156915 ஏ | 167698 ஏ |
| 167688 பி | 173997 ஏ |
| 174000 ஏ | 174000 பி |
| 174000 சி | 174020 ஏ |
| 174020 பி | 174024 ஏ |
| 174031 ஏ | 174061 ஏ |

### உரும்பிராய் சம்பவம்

# பிறேக் சீராக இயங்காததாலேயே பாடசாலை மாணவி பலியானார்

## இராணுவ வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

அண்மையில். உரும்பிராயில் இடம்பெற்ற, பாடசாலை மாணவி பலியாவதற்கு காரணமான, விபத்துடன் சம்பந்தப்பட்ட இராணுவ பஸ்வண்டியின் பிறேக், சீராக இயங்காத காரணத்தினாலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளதாகதெரிய வந்துள்ளது.

மேற்படி யூஹோ 4302 என்ற இலக்கமுள்ள இராணுவ பஸ் வண்டியை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து பரீட்சித்துப் பார்த்த வேளையில் இவ்விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இராணுவ பஸ்புறப்படும் போது ''பிறேக்'' சீராக இயங்கியதாகவும், இடையிலேயே இக் கோளாறு ஏற்பட்டிருக்கலாம் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம், இவ் இராணுவ பஸ் வண்டியின் சாரதியான ஜெயவர்த்தன சுகந்த குமார சந்திர சேகர மல்லாகம் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், விபத்துடன் சம்பந்தப்பட்ட பஸ் வண்டியை எடுத்துச் செல்லவும் மல்லாகம் நீதிமன்ற பதில்நீதவான் மு. சபாநாயகன் அனுமதி வழங்கியுள்ளார்.

(உ-12)

# மட்டு. வைத்தியர்களுக்கு ஐ.சி.ஆர்.சி. வழித்துணை?

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் சிங்கள வைத்தியர்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள் வழங்குவது குறித்து மட்டக்களப்பு இராணுவ கட்டளை அதிகாரி பிரிகேடியர் சேணல் வி. ஆர். எஸ். அன்டனிஸ் சர்வதேசதொண்டர் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவை மற்றும் எம்.எஸ்.எவ் பிரதிநிதிகளை அழைத்து இவ்விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

மட்டக்களப்பிற்கும், வெலிக்கந்தவிற்கும் இடையில் ஐ. சி. ஆர். சி அல்லது எம். எஸ். எவ். தொண்டர் அமைப்பின் வழித்துணையுடன் போக்குவரத்து வசதிகள் அளிப்பதுபற்றி இதில்ஆராயப்பட்டது.

(ந-04)

# கார்த்திகை தீபவேளையில் பாரிய வெடிச் சத்தம்

## கரவெட்டியில் சம்பவம்

(துன்னாலை)

நேற்றுமுன்தினம் கேட்ட பாரிய வெடிச் சத்தம் ஒன்றினையடுத்து அப்பகுதி மக்கள் மிகுந்த பரபரப்புக்கும் பயத்துக்கும் உள்ளானதாக தெரிய வந்துள்ளது.

திருக்கார்த்திகை தீபத் திருநாளான ஞாயிற்றுக்கிழமை இரவு 7.15 மணியளவில், மக்கள் தீபம் ஏற்றலில் மும்முரமாய் ஈடுபட்டிருந்த வேளையில் கரவெட்டிசம்பந்தர் கடையடிப் பக்கம் இருந்து கேட்ட இப் பெரும் வெடிச்சத்தத்தினைக் கேட்டு பீதியுற்ற மக்கள் வீடுகளுக்குள்முடங்கிக்கொண்டதாக அறியமுடிகிறது.

இம் மர்மவெடிச்சத்தம் எங்கிருந்து கேட்டதுஎன்பது இதுவரை தெளிவாக விளங்கவில்லை என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-41)

## கரவெட்டிப் பகுதியில் நியமனக்கடிதம் வழங்கல்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக கடமையாற்றியவர்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பயிலுனர்பதவிக்கான நியமனக்கடிதம் வழங்கும் வைபவம் அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் பிரகாரம், மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த 19 பேர், கடந்த ஒகஸ்ட் மாதம் 18 ஆம்திகதியில் இருந்து பயிலுநர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-75)

# பாலர் பாடசாலைகள் தரம் உயர்த்தல்

(துன்னாலை)

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த 5 பாலர் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றை தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உடுப்பிட்டிதொகுதி அமைப்பாளரும் கரவெட்டி பிரதேச சபைத்தலைவருமான வ. நடராஜா இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

அல்வாய் மாயக்கை பாரதி ச.ச. நிலைய பாலர் பாடசாலை, ராஜகிராமம் ச.ச. நிலைய பாலர் பாடசாலை, இமையாணன் கலைமகள் ச.ச. நிலைய பாலர் பாடசாலை உடுப்பிட்டி ஸ்ரீஅம்பாள் ச.ச. நிலைய பாலர் பாடசாலைநெல்லியடி பாலர் பாடசாலை ஆகியனவே தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# பிள்ளையார் பெருங்கதை

(யாழ்ப்பாணம்)

பிரமனாட்சி தோட்டத்து கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் பிள்ளையார் பெருங்கதை படிப்பு, இன்று மு.ப.10மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 20 தினங்கள் நடைபெறவுள்ளது.

அத் தினங்களில் விஷேட அபிடேக ஆராதனைகளும் இடம் பெறும் (உ)

## இன்று ஒரு தகவல்

### மன நிலையில் மாற்றம் வேண்டும்

மண் புழுவொன்று மண்ணுக்குள் பதுங்கிப் பதுங்கி வாழ்ந்து வந்ததாம். ஏனென்றால் கோழியைக்கண்டுஅஞ்சி நடுங்கியது. சித்தர் ஒருவர் இதனைக்கண்டு இரக்கங் கொண்டு தன் தவவலிமையால் கோழியாக மாற்றினார். மண்புழு கோழியாக மாறியது.ஆனால் கோழியாக மாற்றப்பட்ட மண்புழுபூனையைக் கண்டு நடுங்கியது. எனவே,சித்தர் கோழியைப் பூனையாக மாற்றினார்.

மண் புழு கோழியாகி, கோழி பூனையாக மாறியது. பூனை நாயைக்கண்டு அஞ்சி நடுங்கியது.எனவே, சித்தர் பூனையை நாயாக மாற்றி விட்டார்.நாய் மனிதனைக் கண்டு அஞ்சி நடுங்கியது. சித்தர் அதனை மனிதனாகமாற்றினார்.

சித்தரால் மண்புழு முதலில் கோழியாக மாறி,கோழி பூனையாக மாறி, பூனை நாயாக மாறி, நாய் மனிதனாக மாறி விட்டது. ஆனால் அந்த மனிதனுக்கோ இருட்டைப்பார்த்தால் ஒரே பயம். அமைதியைக்கண்டால் ஒரே பயம்.வெளிச்சத்தைப் பார்த்தால்பயம்.சத்தத்தைக் கேட்டால்பயம்.எனவே சித்தர்அம்மனிதனைமீண்டும் மண் புழுவாக்கினார். அஞ்சுபவர்அன்றாடம்செத்துக் கொண்டிருப்பர்.முழுமையாகவாழ வேண்டுமானால் மனநிலையில்மாற்றம் வேண்டும்.

நன்றி

வானோசை

## இணுவில் மருத்துவமனையில் உடனடி உளவியல் சிகிச்சை

(ஈச்சமோட்டை)

யாழ். மக்களுக்குத்தேவையான உடனடி உளவியல் சிகிச்சை யாழ்ப்பாணம் இணுவில் வைத்தியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்படுகின்றது.

நெதர்லாந்து உளவியல் வைத்திய நிபுணர்களின் உதவியுடன் மேற்படி பயன்தரு சிகிச்சைமுறை இங்கு மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பழை உளநல வைத்திய சங்கம் இதனை ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்கின்றது.

இதுபோன்ற வைத்திய சேவைகள் மேலும் பலஇடங்களுக்குப் பரவலாக்கப்படுவதன் மூலம் அதிக மக்கள் நன்மை பெறுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-59)

## மதுவின் கிறக்கம் பலர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு அருந்திய கிறக்கத்தில் கொடிகாமம் சந்தையின் பழைய கட்டடப் பகுதியில் சாய்ந்து ஆடும் போது கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் தலையில் படுகாயம் அடைந்தவர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சின்னப்பொடி காங்கேசு (வயது-49) என்பவரே பிரஸ்தாப நபராவார்.

இதேவேளையில், கரவெட்டிப் பகுதியில் காலைவேளை மதுவின் மயக்கத்தில் வயலிற்கு சென்றவர் கீழே விழுந்ததில் தலையில் ஏற்பட்ட காயத்துடன் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த செல்லையா நாகராசா (வயது-49)என்பவரே காயத்துடன் அனுமதிக்கப்பட்டவராவார். (க-12)

## திருமலையில் 11 மீனவர் கைது செய்யப்பட்டனர்

(திருகோணமலை)

திருகோணமலை கோட்டைக் கடற்பிரதேசத்தில் மீன்பிடி தொடர்பான கட்டுப்பாடுகளை மீறியதற்காக பதினொருமீனவர்கள் அண்மையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இம் மீனவர்கள், மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கடல் எல்லையைத் தாண்டியதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைதாகிய இந்த மீனவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட போது எதிர் வரும் 15 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனையின் பிரகாரம் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. (ந-4)

## தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் அமைப்புஉதயம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் நலன்களை கவனிக்கும் பொருட்டு ஒரு புதிய அமைப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். உயர் நிலைக் கல்லூரி மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

“தென்மராட்சி இடம் பெயர்ந்தோர் நலன்புரி அமைப்பு” எனும் பெயரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இவ் அமைப்பின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:ஏ. சபாநாயகம், உபதலைவர்: ஆர். இராஜாராம், செயலாளர்: எஸ். நாகேந்திரம், உபசெயலாளர்: கா. சிவஞானசுந்தரம், பொருளாளர்: கு.சதாசிவமூர்த்தி.

மற்றும் ஸ்ரீ கிருபானந்த குருக்கள் நீ. இராசநாயகம், எஸ். சிதம்பரப்பிள்ளை, க. நடராஜா, எஸ். இராசநாயகம்,எம்.கே. ஜீவகதாஸ் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இக் கூட்டத்திற்கு 500 க்கு மேற்பட்ட தென்மராட்சிப் பிரஜைகள் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77)

## யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் இயங்க அனுமதி கட்டடம் தெரிவதில் இழுபறிநிலை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றத்தை இயங்கச் செய்வதற்கான அனுமதி கிடைத்திருந்த போதிலும்கூட, மேல் நீதிமன்றத்துக்கும் பொருத்தமான இடம்இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள சட்டத்தரணிகள் சங்கம் பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்ற போதிலும் கூட அவர்களால் இதற்கான பொருத்தப்பாடான கட்டடத்தைத் தெரிவு செய்யமுடியாத நிலைகாணபபடுகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ளவீரசிங்கம் மண்டபம், நாவலர் கலாசார மண்டபம், சிற்றி மண்டபம் உட்படபலவீட்டுக் கட்டடங்களும் இதுவரை பார்வையிட்டதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, மேல்நீதிமன்றத்தினை விரைவில் இயங்கச் செய்ய வேண்டும்மென்ற முயற்சியில் யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தொடர்ந்தும்ஈடுபட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ள மேல் நீதிமன்றத்திற்கான நீதிபதியும நியமிக்கப்பட்டு விட்டதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

மேலும், மேல் நீதிமன்றத்திற்கான சட்டடமொன்றினைத்தெரிவு செய்துதரும்படி யாழ். சட்டத்தரணிகள் சங்கம்யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது. (க-77)

## தேவாலய வளாகத்தில் மரம் நடுகை

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் சின்னமடு தேவாலயவளாகத்தில்நாளை புதன்கிழமை மரம் நாட்டல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நாளைய தினம், முற்பகல் 10 மணியளவில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இம் மரம் நாட்டலுக்கான ஏற்பாடுகளை புளியங்கூடல் கிராம சேவையாளர் மு. விஜயரத்தினம் மேற்கொண்டு வருகிறார்.

(உ - 75)

## மக்கள் துன்பம்

(செம்பியன்பற்று)

நல்லூர் சங்கிலியன் வீதியையும் சட்டநாதர் வீதியையும் இணைக்கும் ஒழுங்கை பல வருடங்களாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காட்சி அளிக்கின்றது. இதனால் இப் பகுதியால் பிரயாணம் செய்யும் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

(உ-42)

## விதவைகள் மறுவாழ்வு திட்டம்விரைவில்அமுலாகும்

### சர்வோதய வட்டாரங்கள் உறுதி

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்திலுள்ள 12 பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 100 விதைவைகளின் மறு வாழ்வுக்கான திட்டம் ஒன்றினை சர்வோதய இயக்கம் அடுத்த வருடம் ஜனவரி முதல் அமுல்படுத்துவதற்கான ஆரம்பபணிகளை தற்போது மேற் கொண்டு வருகின்றது.

யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் இலக்குக் குடும்பங்களுக்கு வருமான மீட்டும் திட்டம், பாடசாலை செல்கின்ற பிள்ளைகளுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கல், மற்றும் போசாக்கின்மையினால் வாடும் பிள்ளைகளுக்கு போசாக்குணவு வழங்கல்ஆகியவை வழங்கப்படும் என சர்வோதய இயக்கத்தின் செயல் திட்டப் பணிப்பாளர் எஸ். வி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; இத் திட்டத்திற்கான இலக்குக் குடும்பங்களைத் தெரிவு செய்யும் பணிகள் பிரதேச செயலர் பிரிவுகளில் தற்போதுஇடம்பெற்று வருவதாகவும் தெரிவுகள் பூரணப்படுத்தப்பட்டதும் திட்டம் அமுல் செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார். (உ-77)

## கல்வி கற்பதுமுக்கியமல்ல கற்றாங்கு ஒழுக வேண்டும்

### பேராசிரியர் சண்முகதாஸ் வேணவா

(துன்னாலை)

நாம் கல்வியைக் கற்கின்றோம் என்பது முக்கியமில்லை. கற்றதற்கேற்பஒழுகுகின்றோமா என்பது தான் இன்று எம் முன் எழுந்துள்ள கேள்வி.

‘அறிவுடையர் ஆவது அறிவால்’ என்பதற்கிணங்ககற்று உணர்ந்தவன் கற்றதற்கேற்ப ஒழுகி நேர்மையுடையவனாக வாழவேண்டும்.

கடந்த சனியன்று இடம் பெற்ற நெல்லியடி கரவெட்டி யா/ஞானசாரியர்கல்லூரியின் வருடாந்தபரிசளிப்புநிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ சண்முகதாஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலை முதல்வர் வே. சிவசிதம்பரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரைநிகழ்த்திய பேராசிரியர்,

இன்று அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய கல்விச்சீர்திருத்தத்தினால், முன்னைய காலம் போலன்றி ஆசிரியருக்கு சவாலாக மாணவர் தேடிக் கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை எதிர்கொள்ளத் தகக வகையில் ஆசிரியர்கள கற்று கற்பிக்க வேண்டும் என்றார்.

மேலும், இன்று மிகவேகமாக வளர்ந்துவரும் தகவல் தொழில்நுடப வசதியினை, இன்றைய நாட்டுச் சூழ்நிலை காரணமாக நமது மாணவர்கள் பெறமுடியாத நிலை மிகவும் மனம் வருந்தத்தக்கது என்று மேலுமு குறிப்பிட்டார். (உ-41)

## கலைஞர் கௌரவிப்பு

(சுன்னாகம்)

யாழ்ப்பாண றோட்டரிக் கழகத்தால் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில், இம்முறை ஓவியர் ச. சந்திரசேகர், கை வினைஞர்களான வே. பாலேந்திரன், வே. இராமன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

அண்மையில், றோட்டரியன் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக இளைப்பாறிய வடகிழக்கு மாகாண தொழில்நுட்ப கல்லூரிகளின் இணைப்பாளர் ஜெயரட்ணம் கலந்து கொண்டு கலைஞர்களை அறிமுகம் செய்து கௌரவித்தார். (உ-25)

## வீதி திருத்தம்

(அரியாலை)

நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் வீதி மற்றும் ஆசீர்வாதப்பர் வீதிஎன்பன யாழ். மாநகரசபையால் செப்பனிடப்பட்டுள்ளன.

இதனால் பொதுமக்கள் சௌகரியமாகத் தமது போக்கு வரத்தை மேற்கொள்ள முடிகிறது. (ச-106)

## துப்பாக்கி பறிபோனது

(கொழும்பு)

நுவரேலியா மாவட்ட ஐக்கிய தேசிய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவத்தின் கைத்துப்பாக்கி காணாமல் போயுள்ளதாக கோட்டைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சென்ற வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்விற்காக கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்த இவர் பாராளுமன்ற அமர்வு முடிந்த பின்னர் விடுதியிலுள்ள தனது அறைக்கு திரும்பிவந்து பார்த்தவேளை அங்கு வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி காணாமல் போயுள்ளமைதெரியவந்தது.

இதனையடுத்தே பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (ந - 5)

## ஷெல்லினால் காயம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் குருநகர் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால், கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் காலிலும் முதுகிலும் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யேசுதாசன் உதயகுமார் (வயது 23) என்ற குருநகர் வாசியே காயமடைந்தவராவார். (உ-12)

## பயணிகள் கவலை

(துன்னாலை)

மாலை 4.15 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு கச்சேரியூடாக பருத்தித்துறை செல்லும், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து பயணம் செய்வதற்கு ஏற்றதாக இல்லை என பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

(உ-41)

# கொரியாவில் அமைதி ஏற்பட

# சகலரும ஒத்துழைப்பு நல்கவும்

## அதிபர் வேண்டுகோள்

(சியோல்)

கொரிய தீப கற்பத்தில் அமைதியை ஏற்படுத்த ஒத்துழைக்குமாறு வட கொரியாவிற்குதென்கொரிய அதிபர் கிங்கேசுங் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முன்தினம் சுவிடனில் நோபல் பரிசினை பெற்றுக் கொண்ட தென்கொரிய அதிபர் கிங்கேசுங் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தனது வாழ்நாள் பூராகவும் சமாதானத்துக்காகவும் கொரியாக்களின் ஒற்றுமைக்காகவும் பாடுபடப் போவதாகத் தெரிவித்தார். (து)

# பதவி விலகும் இஸ்ரேல் பிரதமர் தேர்தலில் போட்டியிடுவார்

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய பிரதமர் எகுட்பராக் தான் பதவி விலகுவதுடன் சிறிது நாட்களில் தேர்தலை நடத்தவும் அறிவித்துள்ளார்.

பலஸ்தீன - இஸ்ரேல் யுத்தங்களில் சரியான வழி நடத்தலை ஏற்படுத்தாத நிலையில் மக்களிடையே பெரும் எதிர்ப்பினைச் சந்தித்த இஸ்ரேல் பிரதமர் எகுட்பராக் தான் பதவி விலகுவதாகவும் இன்னும் அறுபது நாட்களில் பிரதமர் தேர்தலை நடத்தப் போவதாகவும் அறிவித்தார்.

இதேவேளை தானும் இஸ்ரேல் பிரதமர் பதவிக்கு போட்டியிடப் போவதாகவும் அறிவித்துள்ளார்,

இஸ்ரேலில் தேசிய அரசை அமைக்க எகுட்பராக் முயற்சித்தபோதும் கைகூடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் நாட்டுத் தேர்கல் சட்டப்படிபிரதமரைமக்களே நேரடியாகத் தேர்தல் மூலம் தெரிவுசெய்வார்கள்.

பிரதமர் தேர்தல் தொடர்பான முயற்சிகளில் உடனடியாகவே ஈடுபடப்போவதாகவும் அவர் அறிவித்துள்ளார். (து)

# பாக். முன்னாள் பிரதமர் கடத்தல் வியப்பின் எல்லையில் பெனாசிர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டது பெரும் வியப்பாகவிருப்பதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவி பெனாசிர் பூட்டோ தெரிவித்தார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியாகிய பெனாசிர் பூட்டோ மேலும் தெரிவிக்கையில்;நவாஷ்ஷெரிப்பின்விடுதலையும் நாடுகடத்தலும் ஜனநாயகம் மீண்டும் பாகிஸ்தானில் வந்து விடும் என்ற பயப்பிராந்தியத்தில் மேற்கொண்ட சதிச்செயல் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தொடர்கையில்; நவாஷ்ஷெரிப்பின் விடுதலையைத் தொடர்ந்து மேலும் பலஅரசியல்கைதிகள் விடுவிக்கப்படலாமென்றும் அல்லது நாடுகடத்தப்படலாமென்றும் தெரிவித்தார்.

இதன் மூலம் இராணுவ ஆட்சி தொடரவாய்ப்பிருக்குமென்றும் ஜனநாயக சக்திகளைப் பிரித்தெடுக்கும் முஷாரப்பின் தந்திரோபாயமே இது என்றும் காரசாரமாக தெரிவித்துள்ளார். (து)

# புதுவை அமைச்சர் கண்ணன் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்

(புதுவை)

புதுவை பொதுத்துறை அமைச்சர் கண்ணன் மந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

புதுவை முதல்வர் சண்முகம் மாநில துணை ஆளுநருக்கு கொடுத்த சிபார்சின் பேரில் மத்திய சபையிலிருந்து கண்ணன் நீக்கப்பட்டார்.

மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் ஜயகுமாருக்குமிடையில் ஏற்பட்ட விடுதலைப் புலிகள் சம்பந்தமான சர்ச்சையின் விளைவே கண்ணன் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இவர் புதுவை சட்டசபையின் மத்தியில் நின்று அட்டகாசம் செய்ததாலும் இவர் மீது ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டியுள்ளது. (து)

### சிறைக்கைதிகள் விடயத்தில்

# பிலிப்பைன்ஸ் அதிபரின் உத்தரவு தன்னைக் காப்பாற்றும் முயற்சியே

(மணிலா)

பிலிப்பைன்ஸ் சிறையில் இருக்கும்அரசியல் கைதிகளை விடுவிக்கவும்மரணதண்டனை பெற்றோர்க்கு ஆயுள் தண்டனை பெறவும் அதிபர் ஜோசேப் எஸ்ராடா உத்தரவிட்டுள்ளமை தன்னைக் காப்பாற்றும் ஒருமுயற்சியே என அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

ஊழல் பலசெய்த குற்றத்திற்காக செனற்சபையில் விசாரிக்கப்பட்டு வரும் அதிபர் எஸ்ராடா மேற்படி இந்த சிறைக்கைதிகளுக்கான விடுதலை உத்தரவை விடுத்தார்.

இதேவேளை, மனிதஉறிமை தினத்தினையொட்டியே இந்த சலுகைகள்கைதிகளுக்கு வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# பலஸ்தீனத்திற்கு ஈராக் 100 கோடி யூரோ உதவும்

(பாக்தாத்)

ஈராக் நூறு கோடி யூரோ பணத்தை பலஸ்தீன மக்களுக்கு கொடுக்க முன்வந்துள்ளது.

இஸ்ரேல் யுத்த நெருக்கடிகளால் பெரும் துன்பப்படும் பலஸ்தீன வளர்ச்சிக்காக மேற்படி தொகையை கொடுக்க முன் வந்துள்ளது.

ஒரு வருட எண்ணெய் ஏற்றுமதி மூலம் கிடைத்த பணத்தில் ஒரு பகுதியே இத்தொகையெனக்கருதப் படுகிறது.

முப்பது கோடியை பலஸ்தீன மக்களின் அகதி வாழ்வை நிவர்த்தி செய்வதற்கும் ஏனைய எழுபது கோடியை நாட்டின் அபிவிருத்திக்குமென ஈராக் கொடுக்க முன் வந்துள்ளது. [து]

## 2002 இல் போதை மகாநாடு

(கேப்ரவுன்)

அனைத்து உலக போதைப் பொருள் மகாநாட்டை 2002 இல் நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள்சபை அனுமதி வழங்கியுள்ளது.

இம் மகாநாடு தென்னாபிரிக்காவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஐ. நா அனுமதியுடன் நடைபெறும் இம்மகாநாட்டில் உலகின் பலநாடுகள் கலந்து கொள்ள இருக்கின்றன.

அரசதலைவர்கள் உட்பட நாற்பதினாயிரம் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இம் மகா நாடு தென்னாபிரிக்க ஜோகாவில் நடை பெறுவதற்கான ஆயத்தங்கள் இடம் பெற்றுவருவதாக தெரியவருகிறது. (து)

## பாக். முன்னாள் பிரதமர் நிபந்தனை விதிக்கப்பட்டே நாடு கடத்தப்பட்டார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் நாடுகடத்தலுக்கும் நிபந்தனைகள் போடப்பட்டனவாம்.

இதுதொடர்பாக இரகசியத் தகவல் தரவல்லவர்களின் கூற்றுப்படி நவாஸ்ஷெரிப்பின் குடும்பம் இருபத்தொரு வருடங்களுக்கு அரசியலில் ஈடுபடக்கூடாதென்றும் அப்படி மீறினால் மரணதண்டனை காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை ஐம்பது கோடி ரூபா பெறுமதியான சொத்துகளை பாகிஸ்தான் அரசு தனதாக்கிக் கொண்டது.

ஐம்பதுகோடி சொத்துக்களையும் தந்தால்தான் விடுதலைசெய்ய முடியுமென்று முஷாரப் அரசு வற்புறுத்தி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## நோன்பு வேளையில் குண்டு வெடித்தது

### திருநெல்வேலியில் சம்பவம்

(சென்னை)

திருநெல்வேலி பள்ளிவாசல் ஒன்றில் நேற்று முன்தினம் குண்டு வெடித்ததில் ஒருவர் பலியானார்.

நேற்றுமுன்தினம்பின்னிரவு வேளையில் திருநெல்வேலியிலுள்ள கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலில் நோன்புக்காகச் சமைத்துக்கொண்டிருந்த வேளை குண்டு ஒன்று வெடித்ததாக அறிவிக்கப்படுகிறது.

அந்தக் குண்டு வெடிப்பில் ஒருவர் ஸ்தலத்திலே இறந்துவிட்டதாகவும் அங்கிருந்த சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தசதிவேலையாருடைய வேலையென்பதை அறிவதில் புலனாய்வுத்துறையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

இதுவரை இது தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## சீனாவில் வெடி விபத்து

(பீஜிங்)

சீனாவில் வெடித்தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் பதினொரு பேர் இறந்தனர் ஏழு பேர் காயமடைந்தனர்.

தொழிற் சாலை ஊழியர்கள் ஏழுபேர் மரணமானதாகவும் அயல் வீடுகளிலிருந்தோருக்கு ஏற்பட்ட காயங்களால் நான்கு பேர் இறந்துள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (து)

## உலக தரிசனம்

## செய்திக் குவியல்

### உற்பத்தி குறையும்

மசகுஎண்ணெய்யின் விலை குறைந்து கொண்டிருந்தால் ஒபெக் நாடுகள் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கக் கூடுமென்று குவைத் அமைச்சர் தெரிவித்தார்.

### பதவி விலகல்

இந்தியாவில் பாபர் மசூதி இடிப்பு வழக்குக் குற்றம்சாட்டப்பட்ட மூன்று மந்திரிகளும் பதவி விலக வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

### சமாதானத்திற்கு இரு நாடுகள்

பலஸ்தீன- இஸ்ரேல் அமைதிக்காக பிரான்சும், பிரித்தானியாவும் சேர்ந்து ஒருதிட்டத்தைவகுக்க இருக்கின்றன. இதற்குஇரு நாடுகளும்இணங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சமாதானம்

முத்தரப்புப் பேச்சு மூலந்தான் பிரச்சினையைத் தீர்க்கலாம். இந்தியாஇதற்குத் தகுந்தபதிலைத்தருமெனநினைக்கிறோமென்று பாகிஸ்தான் வெளியுறவுஅதிகாரி தெரிவித்தார்.

### தேசிய கீதம்

சோவியத் ரஷ்யாவின் முன்னைய தேசியகீதத்தை திரும்பவும் கொண்டு வருவதற்கு அதிபர் புட்டின் முயற்சிக்கிறார். (து)

## திருவெம்பாவை ஓதுதல் போட்டி

(துன்னாலை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்ஆலய கரும பீடத்தினர் திருவெம்பாவை விழாவினையொட்டி ''திருவெம்பாவை ஓதுதல்'' போட்டியொன்றினை நடத்தவுள்ளனர்.

இப்போட்டியில் பங்குகொள்ளவிரும்புவோர் தமது விண்ணப்பப்படிவங்களை, இவ்வருடம் முடிவடைவதற்கு முன்னதாக ஆலய கருமபீடத்தில்சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ - 41)

## பஸ் தடம்புரண்டதில் ஒருவர்பலி

(வவுனியா)

முருங்கனிலிருந்து மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஒன்று முருங்கன் பாலத்தடியில் தடம்புரண்டதில் ஒருவர் பலியானார் பதினைந்துபேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் பொலிஸ் அதிகாரி என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-வ)

## இந்து மயானம் புனரமைப்பு

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள இந்து மயானம் அங்கு வாழ் பொதுமக்களினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

இப் புனரமைப்புப்பணிக்கு ஈ.பி.டி.பி அமைப்பினர் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.(உ-22)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

''பரியது கூர்ங் கோட்டது ஆயினும் யானை வெரூஉம் புலிதாக் குறின்''
- குறள்

# வலம்புரி

## மனு நீதி சாகவில்லை

சிஹல உறுமய, ஜே. வி. பி ஆகியஇனவாதக் கட்சிகள் சமாதானத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும் ஆரவாரங்களும் நடத்திக் கொண்டிருக்கும் வேளையில்,

சிங்களவர் எல்லோரும் சமாதானத்தின் விரோதிகள் அல்ல. அவர்களிலும் சமாதான விரும்பிகள் இருக்கவே செய்கின்றார்கள் என்பதை உணர்த்தும் வகையில் காணாமல் போன படையினரின் பெற்றோர்கள் சங்கம் நேற்றைய தினம் பேரணி ஒன்றை நடத்தியுள்ளது.

இனவாதப் பேய்கள் கூடி கும்மாளம் போட்டு ஊளையிடும் தென்னிலங்கைக் காட்டில் நீதி உணர்ந்தவர்களும் இருக்கின்றார்கள் - அவர்கள் தமது ஆதங்கத்தை ஜனநாயக முறையில் வெளிப்படுத்துகிறார்கள் என்றால் அது இன்னமும் இலங்கைத் தீவில் மனுநீதி மரணிக்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

போர்பற்றி - போரின் தாக்கம் பற்றி - உயிரிழப்புப் பற்றி உணராத ஒரு கூட்டமொன்றே இனவாதத்தைக் கக்கி வருகிறது என்பது இப்போது தெளிவாகி விட்டது. சகல வழிகளிலும் சுகபோக வாழ்வை அனுபவித்து வரும் சிங்களப் பேரினவாதிகள், ஏழைச் சிங்கள இளைஞர்களின் மரணத்தில் நின்று ஏப்பம் விடும் நாடகத்தின் ஒரு காட்சியே சிஹல உறுமய, ஜே வி.பி ஆகியவற்றின் ஆர்ப்பாட்டங்களாகும்.

தமது குடும்ப ஏழ்மையினை ஒழிப்பதற்காக கவர்ச்சிகரமான சலுகைகள் என நம்பிப் படையில் சேர்ந்த ஏழைச் சிங்கள இளைஞர்களின் உயிரிழப்பு-காணாமல் போதல் ஆகியவற்றின் தாக்கத்தை உணர்ந்த சிங்களவர்களே இன்று சமாதானத்தை வலியுறுத்துகின்றனர்.

அதன் வெளிப்பாடுகளில் ஒன்றே நேற்றையதினம்நடந்த சமாதானபேரணியும், சமாதானத்தை வலியுறுத்தியதான - ஒரு கிலோ மீற்றர் நீளமான பதாதையில் கையெப்பமிடும் நிகழ்வுமாகும். இத்தகைய சமாதான பேரணிகள் தென்னிலங்கையில் என்று வலுப்பெறுகிறதோ - என்று வியாபிககிறதோ அன்று தான் பேரினவாதிகளின் கொட்டம் அடக்கப்படும், சமாதானத்தின் கீற்று எங்கும் பிரகாசிக்கும்.

# மருத்துவத்திற்கு சவால் விடும் தலைச்சுற்று

# உடல் அசம நிலையின் வெளிப்பாடா?

### டாக்டர் எம். என். சங்கர்

## மருத்துவ விளக்கம்

தலைச்சுற்றல் என்பது நனவு நிலையில் சிறிது சீர்குலைவு ஏற்பட்டு உடல் சமநிலையை இழந்து தடுமாறும் நிலையாகும். மயக்கம், தடுமாற்றம் என்றும் இதனைக் குறிப்பிடுவர். நினை விழப்பு என்பதிலிருந்து இது மாறுபட்டது. தலைச்சுற்றலால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று வகையான அறிகுறிகளைப் பொதுவாகக் கூறுவர்·

★ உடம்பு அல்லது தலைசுற்றுவதுபோன்ற உணர்வு.

★ தன்னைச் சுற்றியுள்ள பொருள்கள், அறை, மேற்கூரை சுற்றுவது போன்ற உணர்வு.

★ தள்ளாடுவது போன்றும், கால்கள் இரண்டும் தடுமாறுவது போன்றும் உணர்வது.

### காரணங்கள்

உடலின் சம நிலை பலவகைக் காரணங்களினால் பாதிக்கப்படுகிறது. செவியும், செவிசார்ந்த நரம்புகளும் சமநிலையைப் பெற உதவுகின்றன. ஐம்புலன்கள் தவிர, சமநிலைப் புலனையும், எறும்புத்தகை சார்ந்த புலனையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். பெருமூளை சிறுமூளையின் கீழ்ப்பகுதி, மூளையின் தண்டுப்பகுதி, காது, கண் மனம் ஆகிய வற்றில் எற்படும் பாதிப்புகள் தலைசுற்றலையும் மயக்கத்தையும் உண்டாக்குகின்றன. வேகமாக ஆடுவது, சுற்றுவது, திடீரென உயரே செல்லுவது, இராட்டினத்தில் சுற்றுவது, இரைச்சல், அதிர்வுகள், துர்நாற்றம் போன்ற புறச்சூழ்நிலை மாற்றங்களாலும் தலைச்சுற்றல் தோன்றலாம்.

### அறிகுறிகள்

நாம நிற்பதும், நடப்பதும், ஓடுவதும் ஒரு பொழுதும் ஒரு பொருட்டாக இருந்ததில்லை, ஆனால் இந்தச் சிறு அசைவுகள் கூடுதலாகச் செய்யும் பொழுது உலகமே சுற்றுவது போல தோன்றி மயக்கமடைவது இயற்கைக்குப் புறம்பானது. இவ்வாறு ஏற்படும் பொழுது, கண் மங்கல் இருட்டுதல், மார்புப்படபப்பு, வியர்வை கொட்டுதல், கை-கால் ஜில்லென்றாகுதல், சுறு சுறுப்பின்மை ஆகியவற்றில் பாதிக்கப்படும் பொழுது பீதி அடைகிறார்கள். உடனே டாக்டரின் ஆலோசனையை நாடுகிறார்கள்.

தலைசுற்றல் ஒரு வியாதி அல்ல, அது ஒருவியாதிக்குண்டான அறிகுறியே, நாம் சமநிலையில் செயல்படுவதற்கு நான்கு முக்கிய உறுப்புகள் தேவை, அவை கண், காது, சிறுமூளை, மற்றும் முள்ளந்தண்டு நரம்புகள். இவை ஒன்றோடொன்று சேர்ந்து செயற்படுவதால் நாம் நினைத்தவாறு அசைகிறோம் இவற்றில்ஒன்றுக்குச் செயற்திறன் குன்றியிருந்தால் தலைச்சுற்றல் ஏற்பட்டுவிடுகிறது. அது அந்த உறுப்பினாலோ அல்லது அதைச்சார்ந்த உறுப்புகளாலோ வரலாம்.

பொதுவாக மயக்கம் வருதல், தலைசுற்றுதல், தலைகனம், தலை எடையில்லாமல் நிலைதடுமாற்றம், மந்தமாக இருப்பது ,சோர்வடைதல், தளளாடுதல் போன்ற பல அறிகுறிகளை நம்மக்கள் தலைசுற்றல் என்று பொதுப் படையாகக் கூறுகிறார்கள்.

### வைத்தியநிபுணர்

இவை தனித்தனியான வியாதிகளால் வருபவை. ஆகையால் நமக்குத் தலைச்சுற்றல் என்று வரும் பொழுதும், மயக்கமாக இருக்கும் பொழுதும், மருத்துவரிடம் நம் நோய்க்குணங்களைச் சரிவர எடுத்துச் சொல்லவேண்டும். காது, மூக்கு, தொண்டை நிபுணர் மட்டுமே, உங்களுடைய தலைச்சுற்றல் அறிகுறியைச் சரிவர ஆராய முடியும். ஏனென்றால் நாம்நிலையாய் இருப்பதற்குரிய உறுப்பு காதின் உட்பகுதியிலுள்ளது. இதன் நிலையைக் காது மருத்துவர்களினால் நன்கு அறியமுடியும், பொதுவாகத் தலைச்சுற்றல் என்பது வயது போகப்போக மிகுதியாகக் காணப்படுகிறது. ஆனால் சிறு பிள்ளைகளுக்கும். கூட தலைச் சுற்றல் வருவதுண்டு. இதனை நாம் மிகுந்த கவனத்துடன் கண்டறிய வேண்டும். தலை சுற்றல் எதனால் வருகிறது? இதன் காரணங்கள் என்னென்ன? எவ்வாறு காரணங்களைக் கண்டறிவது? இதனை எவ்வாறு தவிர்ப்பது என்பதனைப் பற்றி ஆராய்வோம்.

தலைச் சுற்றல் வயது வந்தவர்கள் நான்கில் ஒருவருக்கு வாழ்க்கையில் ஒருதடவையாவது வருவதாகக் கண்டறிந்துள்ளனர். ஒரு பொது மருத்துவரிடம் வரும் நோயாளிகளில் நூறில் ஐந்து பேராவது தலைச் சுற்றலுக்காக வருகிறார்கள். நாம் நடமாடும் பொழுது, நமது காது, கண்கள், கை, கால் ஆகியவை நமது சிறு மூளைக்கும், பெருமூளைக்கும் கருவி போல (கணனி) எப்பொழுதும் விபரங்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறது. இவ்வாறு சேகரிக்கப்பட்டவிபரங்கள் நம் சிறு மூளையிலிருந்து பெருமூளைக்கு கொண்டு செல்லப்பட்டு, அவற்றிலிருந்து செயல்வடிவமாக எடுத்துரைக்கப்படுகிறது. இந்தச் செயலில் சீர்கேடு வரும் பொழுதும் தவறான எச்சரிக்கை மூளைக்கு செல்லும் பொழுதும் நமக்குத் தலைச் சுற்று வருகிறது. இவ்வாறு தலைச்சுற்றினால் பல உறுப்புகள் பாதிக்கப்படுவதனால், தலைசுற்றலைப்பற்றி எல்லாத்துறை மருத்துவர்களும் தெரிந்து கொளளுதல் அவசியம்.

### உடற்பயிற்சிகள்

1946 ஆம் ஆண்டில் காவ்தோர்ன்—குக்சி என்ற இரு ஆங்கிலேய மருத்துவர்கள சில தேகப்பயிற்சிகளைக் கொண்டு அறிவியல் வழியாக தலைசுற்றலை நிவர்த்தி செய்தார்கள, உடற்பயிற்சியால் நரம்பு, நாளங்களும், தசைகளும் அதிக பலம் பெறுகின்றன. இதனால் கழுத்து, கண் மற்றும் காது நரம்புகள வலுப் பெற்று தலைசுற்றலைக் குறைக்கின்றன.

### மன நிலைப்பயிற்சி

உடலும் உளளமும் ஒரு சேரச் செயற்பாட்டால்தான் வாழ்க்கை நன்றாகச் செயல்படும். உடல் சீர்கெட்டாலோ மனம் குன்றும், மனம் குன்றினால் உடல் சீர்கெடும். தலைசுற்றல் வந்த ஆறு மாதங்களுக்குள் நோயாளிகளுக்கு மன ரீதியான சோர்வு ஏற்படுகிறது என்று கணக்கிடப்படுகிறது இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தனியாக வெளியே செல்ல பஸ், ரயில் மற்றும் விமானப் பயணம் செய்ய பயப்படுகிறார்கள். இருட்டைக் கண்டு அச்சம் கொள்கிறார்கள். ஆகையால் தைரியத்தை ஊக்குவிக்கவேண்டும்.

### மருந்துகள்

தகுந்த மாத்திரைகளைச் சாப்பிடும் பொழுது தலைச்சுற்றல் நன்றாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படுகிறது. அவைகளைச் சரிவரச் சாப்பிடவேண்டும். காதைச் சீர்கெடுக்கும் மருந்துகளை உட்கொள்ளக் கூடாது.

### அறுவை சிகிச்சை

சில நேரங்களில் மிகக் கடுமையான தலைசுற்றல், காதுகளில் அறுவை சிகிச்சை செய்வதனால் பூரண குணமடைகின்றது அறுவை சிகிச்சை ஒரு கடைசி உத்தியாகவே கருத வேண்டும். மருந்துகள் செயல்படாமலிருந்தாலொழிய அறுவை சிகிச்சை நேரடியாகச் செய்வது நல்லதல்ல.

### உணவு

தலைசுற்றல் உள்ளவர்கள் நீர்ச்சத்து மிகுதியான காய்கறிகளை உட்கொள்ளுதல் நல்லது கடல் மீன், மாமிசம், ஊறுகாய் முதலியவற்றைத் தவிர்ப்பது நல்லது. உணவு வகைகளைக் குறைவாக உட்கொள்ளுதலும் நன்று படுக்கையில் தலையணையின்றிப் படுக்கவேண்டும், கண்களை மூடிக் கொண்டு ஒரு திசையிலும் திரும்பாமல் படுத்துப் பின்பு மெதுவாக எந்தத்திசையில் திரும்பினால் தலைச்சுற்றல் அதிகமாக உள்ளதோ அந்தத் திசையில் திரும்ப ஓரிருதினங்களில் முயற்சிக்க வேண்டும். தலைச்சுற்றினால் பயப்படும் அளவுக்குப் பிரச்சினை இருந்தால் காது மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நல்லது.

## சமாதானத்தை ஏற்படுத்துமுகமாக மட்டக்களப்பு வைத்தியர்கள், ஊழியர்கள்

# நேற்று மாபெரும் எழுச்சிப் பேரணி

### கோஷங்களும் எழுப்பப்பட்டனவாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் தாதியர்கள், ஊழியர்கள் ஒன்றிணைந்து யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் எனக் கோரி நேற்று மட்டக்களப்பு நகரில் பாரிய சமாதானப் பேரணியை நடத்தினர்.

அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்க மட்டக்களப்பு கிளை, அரச பொது தாதிமார் சங்கம், சிற்றூழியர் சங்கம், பல் வைத்தியர் சங்கம்என்பன இப்பேரணிக்கு பூரண ஒத்துழைப்பையும் ஆதரவினையும் வழங்கினர்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் மு.ப. 10 மணியளவில் ஆரம்பித்த இம் மாபெரும் பேரணி, வைத்தியசாலை வீதி, கோவிந்தா வீதி, முனை வீதி ஊடாக மகாத்மா காந்தி சதுக்கத்தை வந்தடைந்ததுடன் பேரணியில் கலந்து கொண்டோர் அங்கு சுமார் ஒரு மணி நேரம் மறியற் போரில் ஈடுபட்டனர்

இப் பேரணியின் போது, பேச்சுவார்த்தையை குழப்பாதே, பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனத்தில் ஆயுததாரிகளை பயணம் செய்ய அனுமதிக்காதே, போரை நிறுத்து போன்ற கோஷங்கள் ஒருமித்து எழுப்பப்பட்டன.

அத்துடன் போரை நிறுத்தி சமாதானத்தைஏற்படுத்த கோரி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் இலங்கையில் உள்ள சகல வெளிநாட்டுத் தூதரங்களுக்கும் அவசர மகஜர் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம்,

கடந்த புதனன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் அகப்பட்ட பஸ் வண்டியில் பிரயாணம் செய்த வேளை யூட் அருட்பிரகாசம் என்ற மட்டக்களப்பு வைத்தியர் கொல்லப்பட்டமையை அடுத்தே வைத்தியர்கள் சமாதானம் தொடர்பான தமது எழுச்சியை வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-60)

## யாழ்.சிறைச்சாலை கைதிகள் மூவரும் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

களுத்துறை சிறைச்சாலையில் இருந்து யாழ். சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மூன்று கைதிகளும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ் கடந்த வருடப்பகுதிகளில்வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டவர்களான டக்ளஸ் ஜெனோ(வயது 22யாழ்ப்பாணம்)சிறில்செல்ரன் நிரோஸ் [வயது23-குருநகர்] சுப்பிரமணியம் மோகநாதன் (நல்லூர்)என்பவர்களேவிடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

அனுராதபுரம் நீதிமன்றம் களுத்துறை சிறைச்சாலையிலுள்ள இவர்களை யாழ்ப்பாணம் அனுப்பிவைக்குமாறு கட்டளையிட்டதைத் தொடர்ந்து பிரஸ்தாப மூன்று கைதிகள்10 ஆம் திகதி யாழ். சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டு நேற்று யாழ்.நீதிமன்ற பதில் நீதவான் மு திருநாவுக்கரசுவின் முன் ஆஜர்செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (க-12)

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலியானார்

(மட்டக்களப்பு)

கடந்த ஞாயிறன்று இரவு மட்டக்களப்பு திருப்பெருந்துறை என்ற இடத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிவநாயகம் இலங்கேஸ்வரன் (வயது 29) என்பவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச் சம்பவத்தில், தங்கராசா சந்திரகுமார் (வயது 31) ஸ்ரீபத்மநாதன் (வயது 30) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

மரணமான மேற்படி நபர் முன்பு ரெலோ இயக்கத்துடன்இணைந்து செயற்பட்டவரெனவும், அதன்பின்பு சிறிதுகாலம் ராசிக்குழு அங்கத்தவராயிருந்து தற்போது இவற்றைவிட்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தவர் எனவும் தெரியவந்துள்ளது. (உ-60)

## சடலம் ஒப்படைப்பு

வவுனியா ஆதாரவைத்திய சாலையில் நேற்று மாலை 7 மணியளவில் இளைஞனின் சடலம் ஒன்று இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா தாண்டிக்குளம் மரக்கரைப்படை என்னும் இடத்தில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டதாகக் கூறி இச் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம)

### டிசம் - மாத...

றது.

இதேவேளை கல்வி அமைச்சர் சுசில்பிறேம் ஜயந்தவிற்கும் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்திற்கு மிடையே அண்மையில் இடம்பெற்ற சந்திப்பையடுத்தே இக்கொடுப்பனவுகள் வழகப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### யாழ்----.

றை ஏற்படுத்துவதற்கு நோர்வே அரசு ஈடுபட்டுள்ளது.

இந் நிலையில்,

தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பிரதான வீதியிலுள்ளஇடைவெளியை அரசு எப்படியும் கைப்பற்றி இராணுவத்தினருக்கான விநியோகப் பாதையினை பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது. இந்த விநியோகப் பாதையை கைப்பற்றுவதற்கும், இதன்போது ஏற்படவுள்ள அநியாய இழப்புக்களை தவிர்ப்பதற்கும் அரச படைகள் தம்மாலான முயற்சிகளில் இறங்கியுள்ளதுடன் எப்படியும் படையினருக்கான விநியோகப்பாதை திறக்கப்படுமென்றும் படைவட்டாரங்கள் நம்புகின்றன.

இதேவேளை தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் 'புலிகளுக்கு ஆயுதக் கப்பல் வருகிறது' என்ற எச்சரிக்கையானது புலிகளும் யுத்தத்திற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை மேற்குலக நாடுகளிற்கு எடுத்துக்காட்டும் ஒரு தந்திரோபாயம் எனவும் அரசியல்விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### உயிர்தப்பிய--

கப்பட்டுள்ள அறுவது பொலிஸாரில் மூவரையே அவர் அடையாளம் காட்டியுள்ளார்.

இதேவேளைபண்டாரவளை புனர் வாழ்வு முகாமுக்குப் பதிலாக வவுனியாவில் புனர் வாழ்வு முகாமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இளைஞர் விவாகார அமைச்சர் ஜீவன் குமாரதுங்கா அறிவித்துள்ளார்.

இம்முகாம் அமைக்கப்பட்டதும் பண்டாரவளை புனர் வாழ்வு முகாமைச் சேர்ந்த 71கைதிகளும் இங்கு மாற்றப்படுவர். (ந-5)

### ரெலோ--

டக்களப்பு பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் கடந்த புதன் கிழமை அம்பாறை நானமடுவில்முன்னாள் ஈ,பி.ஆர்.எல்.எவ் உறுப்பினரான வீ.அமிர்தலிங்கம் என்பவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்பவதினம் இரவுஇவரது வீட்டிற்குச்சென்றஇனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு சென்றுள்ளனர் எனத் தெரிய வருகிறது. (ந)


### வாழ்த்துக்கள்

கொக்குவில் இந்துவின் புகழ் பூத்த மைந்தன்
உயர்திரு. சி. தவராசா
அவர்கள்
யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமையைப் பெருமிதத்துடன் வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் இந்து சமூகம்.
சி. குணரட்ணம்
கி-1106


# சமாதானத்தை குழப்பும் தீய சக்திகளுக்கு துணைபோகக்கூடாது

## யாழ்.ஆயர் வேண்டுகோள்

(கொழும்பு)

இனப்பிரச்சினையைதீர்த்து வைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு நல்லெண்ண சூழ்நிலைஒன்று இப்பொழுது உருவாகி வருகிறது. இத்தகைய நல்லெண்ண சூழ்நிலையை குழப்ப முயலுகின்றதீய சக்திகளுக்கு அரசோ எதிர்க்கட்சிகளோ துணைபோகக்கூடாதென்று யாழ்.ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைக் கூட்டத்திலேயே ஆயர் மேற்கண்டவாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இவ் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. அங்கு தொடர்ந்து ஆயர் உரையாற்றியதாவது; விடுதலைப் புலிகள் நியந்தனையற்ற பேச்சுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளார்கள். இதில் சமாதான முயற்சிக்கு மத்தியஸ்தராக நோர்வே செயற்பட்டு வருகிறது. இவற்றைக் குழப்புவதற்கு சில தீய சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. இந் நிலைக்கு சிங்கள அரசியல் தலைவர்கள் துணை போகக்கூடாதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா, அமைச்சர் றொனி டி மெல் ஆகியோரைச் சந்தித்து வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதாக ஆயர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## மருத்துவபீடத்திற்கு விரிவுரையாளர்

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட விரிவுரையாளராக லண்டனில் பத்துவருடகாலமாக பணியாற்றிய டாக்டர் உக்கிர பெருவழுதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வைரஸ் நோயியல் பக்றீரியா நோயியல் மூலக்கூற்று நோய் போன்ற துறைகளில் மூன்று முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார்.

லண்டன் இம்பீரிஸ் பல்கலைக்கழகம் [illegible] பல்கலைக்கழகம் உட்பட முக்கிய பல்கலைக்கழகங்களில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## மாடுவெட்டிய மூவர் கைது

பௌர்ணமி தினத்தன்று மாடொன்றினை அனுமதியின்றி வெட்டி இறைச்சிக்கு விற்ற மூவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப நபர்கள் மூவரும் யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு ஐயாயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (இ-12)

### பல்கலைக்கழக---

மேற்கண்டமுடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமதுபதிவை இரத்து செய்துவிட்டு புதிய பதிவைமேற்கொள்ளவிரும்புவர்கள் காலதாமதம் செய்யாமல் மிக விரைவில் தமதுபதிவை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க)

### ஆட்சி..

யின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடுவதை ஜே.வி.பி மற்றும் சிங்கள பேரினவாதக் கட்சிகள் எதிர்க்கும் நிலைப்பாட்டை கொண்டுள்ளன. ஜே. வி. பி. எடுத்திருக்கும் இந் நிலைப்பாடு தென்னிலங்கை மக்களை அதிகம் ஈர்க்கமாட்டாது. ஆனால் அது ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து அரசின் ஸ்திரத் தன்மையை குலைக்க முயற்சிக்கின்றது.

அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் அடிப்படையில் அரசும் புலிகளும் பேச்சு வார்த்தை ஆரம்பிப்பதையே நோர்வே அரசு விரும்புகிறது என்றும் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (வ)

## தமிழ்மொழிஉச்சரிப்பு சீராக்கநடவடிக்கை

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேசவிமான நிலையத்தில் ஒலிபரப்பப்படும் தமிழ் மொழிமூல அறிவிப்புக்களில் காணப்படும் உச்சரிப்பு சீர்கேடுகளைக்களைய நடவடிக்கை எடுத்துள்ளதாக ஈ.பி.டி.பிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன, தமிழ்மொழியில் அறிவிப்புக்கள்தமிழ் மொழியை தாய்மொழியாக கொள்ளாதவர்களால் மேற்கொள்ளப்படுவதாலேயே உச்சரிப்புக்களில் சீர் கேடுகளும் குறைபாடுகளும் மலிந்து காணப்பட்டுள்ளன, இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்வகையில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்,தவராஜா விமானப்பயணத்துறை அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண்டோ புள்ளே'யின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்து விமானநிலையத்தில் தமிழ் மொழிமூல அறிவிப்புக்களை ஒலிபரப்புவதற்கான தமிழ் அறிவிப்பாளர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [ந—4]

## ஒரே நேரத்தில் இரண்டு பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

கணக்காய்வாளர் தெரிவிற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 17 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளைஉயர்தொழில்நுட்ப நிறுவன பரீட்சையும் இம் மாதம் 18 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந் நிலையில் இருபரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகள் நேர சூசியின் பிரகாரம் ஒரே நேரத்தில்இரு பரீட்சைக்கும் தோற்றவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை வெளியிட்டுள்ளனர். (வ)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 9ம்திகதி நுணாவில் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின் போது

★ மண்முகி
நகுலேஸ்வரன் நந்தகுமார்
(கிளிநொச்சி)

★ அருந்தா
தியாகரட்ணம் சொர்க்கலதா
(புதுக்குடியிருப்பு)

★ மதிவாணி
நாகேந்திரம் ராகினி
(யாழ்மாவட்டம்)

★ வித்திகா
சிவலிங்கம் சிவலோஜினி
[யாழ்மாவட்டம்]

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். [ந-5]

## சிறிதரனுக்கு இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரியான க.சிறிதரன் இம்மாதம் 20ம் திகதிமுதல் கொழும்பு மனிதஉரிமைகள் ஆணைக்குழு தலமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின்இணைப்பதிகாரியாக கடந்த ஒருவருடமாகக்கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது சிறிதரனின் இடத்திற்கு எஸ்.இரவீந்திரன் நியமனம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ம]

## அழுகிய நிலையில் சடலம்

(வவுனியா)

வன்னிப் பிரதேசத்தில் கொனியன் குளக் காட்டுப் பிரதேசத்தில் அழுகிய நிலையில் சடலமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க இச்சடலத்தில் நீலநிற சேட்டும் வெள்ளை நிற சாரமும் ஒருசோடி பாட்டா செருப்பும் காணப்படுவதாகவும் சடலத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். (வ)


### தேவை

பிளேட்டின் மெசின்மைன்டர்கள் தேவை.
நேரில் வரவும்.
சரவணா அச்சகம்
233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[சத்திரத்துச் சந்தி அருகில்]
கி-1105


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.